1986 மே 13]

மாண்புமிகு பேரவை தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறிவிடாத வினாக்கள் :

1—

அனல் மற்றும் அணுமின் உற்பத்திக்கு சிறப்புத் திட்டம்

வினா 509— திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர் மின் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் அனல் மற்றும் அணு மின் உற்பத்திக்காக சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு மேற்கொண்டுள்ளதா?

(ஆ) இதற்காக நிபுணர் குழு அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

2—

வினா 664—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசிடம் மாநில அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

[1986 மே 13

3

திருவில்லிபுத்தூர் பனை ஆராய்ச்சி நிலையம்.

வினா—764 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

4—

போக்குவரத்துக் கழகம் மூலம் பாலிடெக்னிக்குகள்.

வினா-880 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் மாநிலத்தில் பாலிடெக்னிக்குகள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன?

விடை—

எங்குமில்லை.

5—

திண்டுக்கல் மருத்துவ மனையில் காசநோயாளிகளுக்கு கூடுதல் படுக்கைகள்.

வினா-894 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் காச நோயாளிகளுக்கான படுக்கை வசதி மிகவும் குறைவாக உள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

TRUTH ALONE TRIUMPHS

1986 மே 13,]

விடை

(அ) அரசுக்கு புகார்கள் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

பத்திரிக்கையாளர்களுக்கு வீடுகள்.

வினா 1351—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

7—

வினா 2189—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பீட்டர்ஸ் காலனியில் வாடகை வீட்டில் வசித்து வரும் பத்திரிகை நிருபர்கள், தொலைக் காட்சி, வானொலியைச் சார்ந்த ஊழியர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1936 மே 13

8—

சென்னையில் திறந்தவெளி சாக்கடைகளுக்கு குழாய்கள்.

வினா 1481—திரு. கைதை சா. நூரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் திட்டம் பணிகளுக்காக வாங்கப்பட்ட குழாய்களை சென்னை மாநகரில் திறந்த வெளிச் சாக்கடைகளில் பயன்படுத்துவதற்காக பொதுப் பணித்துறையில் இருந்து வாங்கி பெருநகர் கழிவு நீர் வடிகால் வாரியம் பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

9—

திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையில் அரசு மருத்துவமனை.

வினா 1493—திரு. டி. ஆர். வேங்கடமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையில் ஒரு அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

10—

மின் வாரியத்திற்கு உலக வங்கி உதவி :

வினா 1560—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1986 மே 13,]

(அ) தமிழகத்தில் புதிய மின் திட்டங்களை செயல்படுத்தவும், செயல்படும் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும் மின் வாரியம் உலக வங்கியிடம் நிதி உதவி ஏதும் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

சானார்பட்டி யூனியனில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்

வினா 1693 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் எல்லைப்பட்டி மற்றும் தி. பாளைப்பட்டி ஆகிய கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

விடை

இல்லை.

12—

மின் கம்மியர்கள்

வினா 1725—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கம்பியர்கள் அந்தந்த ஊரில் குடியிருப்பதில்லை என்று புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

சமூக நலக்காடுகள் பராமரிப்பு

வினா 2012—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமூக நலக் காடுகள் திட்டத்தில் 100 கன்றுகளுக்கு ஒரு காவலர் என்ற அடிப்படையில் நியமிக்க பரிசீலனை எதுவும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

14—

வினா 2353—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடு வளர்ப்பின் கீழ் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் வைக்கப்பட்டுள்ள மரக் கன்றுகளை பராமரிக்க முழு நேர ஊழியர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1986 மே 13

15—

துறைமுகங்களை ஆழப்படுத்த மணல்வாரி கப்பல்.

வினா 2054—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய துறைமுகங்களின் முகத்துவாரங்களை ஆழப் படுத்துவதற்காக மணல்வாரி கப்பல் வாங்க அரசு முடிவு செய் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

கோவையில் பாதாள இரயில் பாதை திட்டம்.

வினா 2091—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாநகரில் பாதாள இரயில் பாதை திட் டத்தை உருவாக்குவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்ய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

17—

தஞ்சையில் கடல் ஆமைகள் ஆராய்ச்சிக் கூடம்.

வினா 2096—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல் ஆமைகள் ஆராய்ச்சிக் கூடம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(அ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

18—

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சிறுசேமிப்பு.

வினா 2300—திரு க. வே வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனும் மான்யமும் பெற மனு பொது மக்கள் கொடுக்கும் போது சிறு சேமிப்பு நான்கு சதவீதம் மான்யத் தொகை மீது வசூல் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) அரசு அவ்விதம் ஆணையிடவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

19—

அர்ஜீனாபுரம் நல்லதங்காள் கோவில் மற்றும் கிணறு சீர்படுத்தல்

வினா 2507—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அருகே அர்ஜீனாபுரத்தில் உள்ள 'நல்ல தங்காள்' கோவிலையும் கிணற்றையும் சீர் அமைக்கும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

20—

கோட்டையூர், ஊராட்சி மருத்துவமனை.

வினா 2513—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, கோட்டையூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.

21—

உணவு விடுதிகளில் வழங்கும் குடிநீர்.

வினா 2514—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு விடுதிகளில் வழங்கப்படும் குடி நீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறதா?

விடை—

உணவு விடுதிகளில் வழங்கப்படும் குடிநீரை பரிசோதனை செய்வதில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1986 மே 13

22—

நாய்க்கடியில் இறந்தவர்கள்.

வினா 2520—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1977 முதல் 1984 முடிய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, கிராமப் பகுதிகளில் நாய் கடியில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) நாய்க்கடிக்கு போதிய மருந்துகள் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) 1977 முடிய 1984 முதல் 2,196 பேர்கள் இறந்துள்ளனர்.

(ஆ) ஆம்.

23—

திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம்

வினா 2553—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

24—

பள்ளிக்கட்டிடங்களை பழுதுபார்த்தல்.

வினா 2632—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடங்களை உலக வங்கி உதவியுடன் பழுது பார்க்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

25—

விராலி மலையில் மயில்கள் சரணாயம்.

வினா 2720—திரு. க. சோலைராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் விராலி மலையில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

26—

தாமிரபரணி நீர்மின் திட்டம்

வினா 2822—திரு. ப. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி நீர்மின் திட்டத்திற்கு மைய அரசு அனுமதி வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

பம்மல் பேரூராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

வினா 2765—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

28—

பார்வையற்றவர்களுக்கு தனி பாலிடெக்னிக்.

வினா 3063—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பார்வையற்றவர்களுக்காக தனி பாலிடெக்னிக் தொடங்கும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

1986 மே 13]

29—

ஹெலிகாப்டர் மூலம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம்

வினா 3068—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஹெலிகாப்டர் மூலம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்யும் முறையினை பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

30—

மெரினா கடற்கரை மகாபலிபுரம் படகு போக்குவரத்து

வினா 3080—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா பயணிகளை கவருவதற்காக சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரம் வரை படகு போக்குவரத்தை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

குமரி மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரி

வினா 3166—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைவாணர் பெயரில் குமரி மாவட்டத்தில் தொழில் நுட்பக்கல்லூரி தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

32—

வால்பாறை சின்கோனா தோட்டம்

வினா 3232—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள சின்கோனா அரசு எஸ்டேட்டில் 7,500 ஏக்கர் நிலம் சரியாக பயன்படுத்தப்படாததால் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

33

தமிழகத்தில் தனியார் வேளாண்மைக் கல்லூரி

வினா 3268—மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார்கள் வேளாண்மைக் கல்லூரி தொடக்க அனுமதி கோரியுள்ளதா ?

1986 மே 13]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34—

வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களின் எண்ணிக்கை.

வினா 3497—திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ், வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு எண்ணியுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

35—

கூடலூர் மைசூர் இணைப்பு சாலையை மாற்றி அமைத்தல்

வினா 3584 – திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்த்த கூடலூர்-மைசூர் இணைப்புச் சாலையை மாற்றியமைக்க புதிய திட்டம் ஏதேனும் உண்டா ?

1686 மே 13

(ஆ) அச்சாலையை மாற்றுவதில் பொது மக்கள் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்களா ?

விடை—

(அ) மேற்கூறிய புதிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

36—

கூக்கல் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

வினா 3613—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம் கூக்கல்தொரை உயர்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) அப்பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

37—

அரசு அச்சக அலுவலர்களுக்கு மெட்டல் பாயிசன் அலவன்ஸ்

வினா 3641—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு அச்சகங்களில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் மெட்டல் பாயிசன் அலவன்ஸ் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1986 மே 13]

38—

அரசு அச்சக பணியாளர் வாரிசுகளுக்கு முன்னுரிமை.

வினா 3648—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகத்தில் ஆட்களை வேலைக்கு எடுக்கும்போது பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

இல்லை.

39 —

கன்னியாகுமரி பொழியூர் கடற்கரை சாலை

வினா 3661—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி முதல் பொழியூர் வரையிலான கடற்கரை சாலை அமைக்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இடைஇடையே கட்டப்படவேண்டிய இணைப்புப் பாலங்கள் கட்டுவதற்கு அரசு உத்திரவிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழ இடமில்லை.

40—

கும்பகோணம் சாக்கோட்டை சாலையில் புதிய பாலம்

வினா 3697—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகுப் போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் சாக்கோட்டை ஊர்களை இணைக்கும் பழுதுபட்ட அரசலாறு பாலத்திற்கு பதில் புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1986 மே 13

விடை—

மேற்கூறிய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41 —

கோவையில் அனல்மின் திட்டம்.

வினா 3713 — திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் அனல் மின் நிலையம் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை —

இல்லை.

42 —

குடுமியாமலை சாரையூர் சாலையில் வெள்ளத்திற்கு பாலம்.

வினா 3709 — திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் (குடுமியாமலை—சாரையூர் சாலையில் (வழி கைவேலிப்பட்டி) வெள்ளாற்றில் பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

43 —

இரணியல்—முட்டம் சாலை

வினா 3792 — திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

1986 மே 13]

(அ) குமரி மாவட்டம் இரணியல்— முட்டம் சாலையை, அகலப்படுத்தி அதன் இரு பக்கங்களிலும் சுவர் கட்டிடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

44 —

மணவாளக்குறிச்சி — குளச்சல் சாலையை சீர் அமைத்தல்

வினா 3793 — திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டத்தில், மணவாளக்குறிச்சி — குளச்சல் சாலையை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

45 —

ஆசாரிப்பள்ளம் — பெருஞ்செல்வவிளை சாலை

வினா 3794 — திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம் — பெருஞ்செல்வ விளை சாலையில் உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்கும், சாலை சீரமைக்கவும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

46 —

புதுப்பட்டி அருகே அர்ச்சனா நதியில் மேம்பாலம்

வினா 3795—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி எம். புதுப்பட்டி அருகில் உள்ள அர்ச்சனா நதியில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

47—

கடலூரில் இரயில்வே மேம்பாலம்

வினா 3882 — திரு. துரை அன்பரசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் இரயிவே மேம்பாலம் அமைக்கும் பணி அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்போது துவங்கப்பெறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1986 மே 13

48—

திருவக்கரையில் சங்கராபரணி ஆற்றில் தரைப் பாலம்

வினா 3883 — திரு துரை அன்பரசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திருவக்கரையில் இருக்கின்ற அருள்மிகு வக்ர காளி ஆலயத்தின் அருகிலுள்ள சங்கராபரணி ஆற்றில் தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

49—

சக்தி — கோபி குள்ளம்பாளையம் பாதையின் குறுக்கே பாலம்

வினா 3890 — திரு வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானிசாகர் தொகுதி சக்தி கோபி மெயின் ரோடிலிருந்து குள்ளம்பாளையம் செல்லும் பாதையின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

[1986 மே 13

50—

குடியிருப்புப் பகுதிகளில் கள்,, சாராயக் கடைகள்

வினா 3929 — திரு மு. மாரிமுத்து: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியிருப்புகளின் ஒதுக்குப்புறமான இடங்களில் கள், சாராயக் கடைகளுக்கான இடம் ஒதுக்கித் தந்து வாடகைக்கு விடுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

51—

கிருஷ்ணகிரியில் சர்க்கரை ஆலை

வினா 3956 — திரு க. இரா. சின்னராசு: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

52—

நம்பியூர் பேரூராட்சி பேருந்து நிலையம்

வினா 3982 — திரு வே. கு. சின்னசாமி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நம்பியூர் பேரூராட்சியில் நகரப் பேருந்து நிலையம் கட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

1986 மே 13]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

53—

நம்பியூர் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்கள் விடுதிக்கு கட்டிடம்.

வினா 3983 — திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நம்பியூரில் இயங்கிவரும் தாழ்த்தப்பட்டோர் (ஆண்கள், பெண்கள்) மாணவ விடுதிகளுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

54—

ரோடு கார்ப்பரேஷன்.

வினா 3997 — டாக்டர் அ. பொன்னுசாமி, திரு கா. செ. பழனிச்சாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. யு. பி. மாதையன், மற்றும் திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரோடு கார்ப்பரேஷன் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

55—

மூப்பம்பட்டி பஞ்சாயத்தை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைத்தல்.

வினா 4109 — திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஒன்றியம் மூப்பம்பட்டி பஞ்சாயத்தை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைக்கும் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

56—

ஆதமங்கலம் துணை மின் நிலையம்.

வினா 4287 — திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆதமங்கலம் கிராமத்தில் (கலசப்பாக்கம் தொகுதி) அமைக்கப்பட்டு வரும் துணை மின் நிலையம் எப்போது திறக்கப்படும்?

விடை—

31 7–1985 அன்று இயக்கப்பட்டு விட்டது.

57—

கடலாடி ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 4302 — திரு அ. பிரணவநாதன் :மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1986 மே 13]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் டாக்டர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பெண் டாக்டர் நிய மிக்கப்படுவாரா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒரு பெண் உதவி அறுவை மருத்துவரை நியமித்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர் ஆணை பிறப்பித் துள்ளார்.

58—

பேரூர் தொகுதி வேலாண்டிபாளையத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி.

வினா 4351 — திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வேலாண்டி பாளையத்தில் உயர்நிலைப்பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

59—

சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை.

வினா 4403 — திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட சாலிக் கிராமம் 112 வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர், கே. கே. நகர், ஜாப்பர்கான்பேட்டை 113 வது வட்டங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கும்?

[1986 மே 13

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

60 —

நத்தம் — செந்துரை ரோடிலுள்ள வஞ்சி ஊற்று நீர்.

வினா 4430 — திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம்—செந்துறை ரோட்டிற்கு மேற்கில் உள்ள வஞ்சி ஊற்றிலிருந்து வடும் நீரைத் தேக்கி பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

61—

கோவையில் நவீன வசதி இறைச்சி, மீன் அங்காடி.

வினா 4645 — திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் நவீன வசதி செய்யப்பட்ட இறைச்சி-மீன் மார்க்கெட் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை —

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

62 —

கோடை வாசஸ்தலங்களில் மத்திய தரக் குடும்பங்களுக்கு ஓய்வு அறைகள்

வினா 4673 — திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1986 மே 13]

கோடை வாசஸ்தலங்களான கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களிலும் குற்றாலத்திலும் சாதாரண மத்தியத் தரக் குடும்பங்கள் சென்று தங்குவதற்கு வசதியாக ஓய்வு அறைகளை பொதுப் பணித்துறை மூலம் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

விடை —

இல்லை.

63 —

பகல் காட்சி சினிமாவை ரத்து செய்தல்.

வினா 4927— வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாநிலத்தில் பகல் காட்சி சினிமாவை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

64—

முசுகுந்து நதியில் ராவுத்த நல்லூருக்கும் பிரும்ம குண்டத்திற்கும் அருகில் பாலம்.

வினா 5004 — திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்கராபுரம் தொகுதி முசுகுந்தா நதியின் குறுக்கே ராவுத்த நல்லூருக்கும், பிரும்ம குண்டத்திற்கும் அருகில் கருப்புச சாலைத் திட்டத்தின் கீழ் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

65—

தோட்டக் கலைக் கல்லூரி.

வினா 5296 — திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தோட்டக்கலைக் கல்லூரி தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது, எங்கு, எவ்வளவு செலவில் அமைக்கப்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

66—

கோவை காந்திபுரம் ரோட்டை அவிநாசி வரை நீட்டித்தல்.

வினா 5626 — திரு மு. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் செல்லும் கோவை-காந்திபுரம் 100 அடி ரோட்டை, கிழக்குப் புறமாக மேலும் நீட்டித்து அவிநாசி மெயின் ரோட்டில் இணைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

(ஆ) இது பற்றி மாநகராட்சி மன்றத்திற்கு அரசு உத்தரவு போட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மேற்கூறிய திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

67—

முறைசாராக் கல்வித் திட்டம்.

வினா 5802 — திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாராக் கல்வித் திட்டத்தில் (Non-Traditional Course) அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது அறிமுகப்படுத்தப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.

68—

அனுப்பர்பாளையத்தை திருப்பூர் நகராட்சியோடு இணைத்தல்.

வினா 5891 — திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 15, வேலம்பாளையம் பேரூராட்சியிலுள்ள அனுப்பர்பாளையத்தை திருப்பூர் நகராட்சியோடு சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

69—

காவேரி மேம்பாடு திட்டத்திற்கு உலக வங்கி கடன்.

வினா 6480 — திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் காவேரி மேம்பாடு திட்டத்தில் உலக வங்கி மூலமாக கடன் பெற்று வாய்க்கால்கள் வெட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

70—

மரம் நடும் பணியை ஒரே துறையால் செயல்படுத்தல்.

வினா 689) — திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இப்பொழுது பல்வேறு துறைகளின் மூலம் நிறைவேற்றப்படும் மரம் நடும் பணி ஒரே துறையால் (Under one Agency) நடைபெற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2 ஒழுங்குப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலை 11.08 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு நடைபெற இருக்கிறது. அதிலே உங்கள் கட்சித் தலைவர் வருவார்கள். அங்கே தெரிந்து கொள்ளுங்கள். ஆகவே இது பாய்ண்ட் ஆப் ஆர்டரில் வராது. இவையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. பக்தவச்சலத்தின் 89-வது பிறந்த நாளை முன்னிட்டு இந்த அவை சார்பாக அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.